


**07.09. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. ஊழலற்ற நேர்மையான நல்லாட்சியை வழங்குவதில் த.வெ.க அரசு உறுதியுடன் இருப்பதாக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்..

2. திமுக மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முதலமைச்சர் கூறியுள்ளதாக எதிர்கட்சி தலைவர் திரு.உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

3. தமிழ்நாடு வனப்பணி புத்துயிர் திட்டம் 100 கோடியே 72 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ரஞ்சித்குமார் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் விரைவில் தனி வரி விதிப்பு வட்டம் உருவாக்கப்படும் என்று வணிகவரித்துறை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ் செல்வன் பேரவையில் அறிவித்தார்.

5. நாகை வேளாங்கண்ணி பேராலய ஆண்டு திருவிழா தேர்பவனி இன்று இரவு நடைபெறுகிறது.

## இனி விரிவான செய்திகள்

முதலமைச்சர்

லஞ்சம் ஊழலற்ற நேர்மையான தூய்மையான நல்லாட்சியை வழங்குவதில் த.வெ.க அரசு உறுதியுடன் இருப்பதாக முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் காவல்துறை, தீயணைப்பு மீட்பு துறை மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்கு இன்று பதில் அளித்து பேசிய, முதலமைச்சர் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அனைவருக்கும் பாதுகாப்பான ஆட்சியை நிலைநிறுத்துவோம் என்றார்.

பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுப்பதற்கு தமது அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் கூறிய அவர், அத்தகைய குற்றச்செயலில் ஈடுபடுவோர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றார்.

அதிகாரப்போட்டி, போதை கலாச்சாரம், குடும்பத்தகராறு, உள்ளிட்ட செயல்களால் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாகவும், இச்செயல்களை கடந்த ஆட்சியினர் தடுக்க தவறி விட்டதாகவும் அவர் குறை கூறினார்.

போதை கலாச்சாரத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளை தாம் விரைந்து மேற்கொண்டிருப்பதாகவும், போதை கலாச்சாரம் எனும் மரத்தை வேரோடு களைய 35 மாவட்டங்களிலும் போதை தடுப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு துரிதக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக கூறினார்.

போதை குற்றங்கள் மீது 3 ஆயிரத்து 263 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நான்காயிரத்து 350 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவர்களிடமிருந்து சுமார் 4 ஆயிரத்து 800 கிலோ கஞ்சாவும், ஒரு லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டதாகவும் கூறினார்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கையில் எந்த சமரசத்திற்கும் இடமில்லை என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

காவல் நிலைய உயிரிழப்புகளை தடுக்க கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் இதுதொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படும் என்றும் கூறினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுப்பதற்கு அமைக்கப்பட்ட சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினரின் செயல்பாடுகளை சுட்டிக்காட்டிய அவர், இப்படையினருக்கு 350 கோடி ரூபாய் செலவில் நவீன வாகனங்களும், உபகரணங்களும் வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

அதிரடிப்படையின் நடவடிக்கையால் 268 பேர் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும்

125 பெண்கள் மற்றும் குழந்தைகள் மீட்கப்பட்டிருப்பதாகவும்

21 குழந்தை திருமணங்கள் தடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மக்களை காக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வரும் காவல்துறை மற்றும் தீயணைப்பு மீட்பு பணிகள் துறையின் காவலர்கள் மற்றும் வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும்,

தேவையான அளவிற்கு காவலர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்றார்.

கருத்துரிமை பேச்சுரிமை என்ற பெயரில் பெண்களுக்கு எதிரான அபாச, வன்முறை கருத்துக்களை பேசுவதை அரசியல் வாதிகள் நிறுத்த வேண்டும் என்றும், முதலமைச்சர் வலியுறுத்தினார்.

************

திமுக வெளிநடப்பு

தமிழக சட்டப்பேரவையிலிருந்து திமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

திமுக ஆட்சி காலத்தில் நடைபெற்றதாக பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் லஞ்ச ஊழல்கள் குறித்து முதலமைச்சர் பேசியபோது திமுக உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று அதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர்.

சுமார் 40 நிமிடத்திற்கும் மேலாக முதலமைச்சர் பேசிகொண்டிருக்க எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின் உட்பட திமுக உறுப்பினர்களும் தங்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்று முதலமைச்சருக்கும் அரசுக்கும் எதிராக கோஷங்களை எழுப்பினார்கள்.

அப்போது பேசிய பேரவை தலைவர் திரு.ஜே.சி. டி பிரபாகர் முதலமைச்சர் பேசுகையில், அவருடைய பேச்சுக்கு இடையூறு

செய்யும் வகையில் திமுகவினர் நடந்து கொண்டதால் எதிர்கட்சி தலைவருக்கு பேச வாய்ப்பு வழங்க முடியாது என்று உறுதிபட தெரிவித்தார்.

இந்த நேரத்தில் திமுக உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக எழுந்து வந்து பேரவை தலைவரை சுற்றி தரையில் அமர்ந்து அவருக்கு எதிராக தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அவர்களை வெளியேற்றும் சூழல் உருவான நிலையில் முதலமைச்சர் எதிர்கட்சி தலைவருக்கு பேச வாய்ப்பளிக்கலாம் என்றார்.

அப்போது குறுக்கிட்ட அவை முன்னவர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவை விதிகளுக்கும் மரபுகளுக்கு மாறாக திமுக உறுப்பினர்கள் நடந்துகொண்டு குழப்பம் விளைவித்ததால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினார்.

முதலமைச்சரின் பரிந்துரையின் அடிப்படையில் தங்கள் தரப்பிற்கு பேச வாய்ப்பு கிடைக்கும் என்று கருதி திமுக உறுப்பினர்கள் தங்கள் இருக்கைகளுக்கு சென்று அமர்ந்தனர்.

ஆனால் பேரவை தலைவர் தன்னுடைய நிலைபாட்டில் உறுதியாக இருந்து எதிர்கட்சி தலைவரை பேச அனுமதிக்காததால் திமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

************

உதயநிதி

பின்னர் சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின் பதிலுரை என்ற பெயரில் முதலமைச்சர் திமுக மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

அக்குற்றச்சாட்டுகளுக்கு உரிய பதிலும் விளக்கமும் அளிக்க வாய்ப்பளிக்காததால் பேரவையிலிருந்து திமுக வெளிநடப்பு செய்ததாக கூறினார்.

த.வெ.க. ஆட்சியின் சட்டம் ஒழுங்கு பிரச்சனை குறித்து முதலமைச்சர் பதில் உரையில், திமுக ஆட்சியில் நடைபெற்றதாக பல சம்பங்களை சுட்டிக்காட்டி பேசுவதை தவிர்த்து, தாம் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு உரிய பதில் அளிக்க வலியுறுத்தியதாக குறிப்பிட்டார்.

ஆனால் முதலமைச்சர் திமுக மீது பொய்யான தேவையற்ற குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காக சுமத்தியதாகவும், இதற்கு பதில் அளிக்க பேரவை தலைவரிடம் பலமுறை கேட்டும் வாய்ப்பு வழங்கப்படாததால், அதிருப்தியை வெளிப்படுத்தும் வண்ணம் வெளிநடப்பு செய்ததாக திரு.உதய நிதி கூறினார்.

************

ரஞ்சித்குமார்

தமிழ்நாடு வன பணி படையின் புத்துயிர் ஊட்டல் திட்டம் 100 கோடியே 72 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 5 ஆண்டுகளில் மறு சீரமைக்கப்பட்டு வலுப்படுத்தப்படும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு.ரஞ்சித்குமார் தெரிவித்தார்.

பேரவையில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான மானியக்கோரிக்கை மீது இன்று உரையாற்றிய அவர், வன, தீ மேலாண்மை திட்டம் 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும், என்றார்.

வனத்துறையில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஆயிரத்து 947 சீருடை பணியாளர்களுக்கு 12 கோடி ரூபாய் செலவில் அறிமுக பயிற்சி அளிக்கப்படும் என்பது உள்ளிட்ட 12 புதிய அறிவிப்புகளை திரு.ரஞ்சித்குமார் வெளியிட்டார்.

************

லோகேஷ் தமிழ் செல்வன்

வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை மீதான மானியக்கோரிக்கை மீது பேசிய இத்துறைக்கான அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ் செல்வன் விரைவில் தனி வரி விதிப்பு வட்டம் உருவாக்கப்படும் என்றார்.

இத்துறையில் சீர்மிகு இணையதள வசதி ஏற்படுத்தப்படும் என்றும், புதிய பொருளாதார நுண்ணறிவு பிரிவு உருவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

தமது துறையின் பயிற்சி கொள்கைகள் மறு சீரமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

A.P.I தொழில்நுட்பம் மூலம் இறப்பு மற்றும் வாரிசு உரிமை சான்றிதழ்கள் நிகழ்நேரத்தில் சரிபார்த்து போலி ஆவன பதிவுகள் தடுக்கப்படும் என்றும், அமைச்சர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு வழங்கப்படும் பதிவு சேவைகளின் தரத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் தற்போது 100

சார்பதிவாளர் அலுவலகங்களில் நடைமுறையில் உள்ள சனிக்கிழமை கட்டாய பணிமுறை கைவிடப்படும் என்றும், அமைச்சர் எடுத்துரைத்தார்.

************

ராஜீவ்

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.ராஜீவ் தமது துறை மானியக்கோரிக்கை அறிவிப்பில் உயிர் பன்மயத்தினை மேம்படுத்தி பாதுகாக்கும் நோக்கில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர உயிர் பன்மய குறியீடு உருவாக்கப்படும் என்றார்.

ஆண்டுதோறும் 200 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், 5 அரசு கல்லூரிகள் சுமார் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீள பசுமை வளாகங்களாக மாற்றி அமைக்கப்படும்,

கோவை கடலூர் பெரம்பலூர் விருதுநகர் விழுப்புரம் ஆகிய இடங்களில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காலநிலை மீள்திறன் மையங்கள் உருவாக்கப்படும்,

ஏழரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 நடமாடும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு வாகனங்கள் இயக்கப்படும் என்பன உள்ளிட்ட அறிவிப்புகளையும் வெளியிட்டார்.

************

நாகை

நாகை வேளாங்கண்ணி பேராலயத்தின் ஆண்டு பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேர்பவனி இன்று இரவு நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாதை யாத்திரையாக வேளாங்கண்ணிக்கு வந்த வண்ணம் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

நாகை மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

************

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 12 ஆயிரம் கன அடியாக இன்று அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கடை மடை வரை காவிரி நீர் செல்லும் வகையில் கூடுதல் நீர் திறக்கப்படுவதாக எமது சேலம் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

கோவில்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் ஆவணி திருவிழாவில் சுவாமி பச்சை சாத்தி அலங்கார வீதி உலா இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் குறுவை பருவத்தில் வாழை மரவள்ளி மஞ்சள் ஆகிய பயிர்களுக்கு தேசிய பயிர் காப்பீட்டு இணையதளத்தில் காப்பீடு செய்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி சரண்யா அறி அறிவுறுத்தியுள்ளார்.

கடலூர் மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ள 136 நெல் கொள்முதல் நிலையங்களில் குறுஞ்செய்தியின் அடிப்படையில் முன்பதிவு செய்து விவசாயிகள் நீண்ட நேரம் காத்திருக்காமல் நெல் விற்பனை செய்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

e-D P C இணையதளம் மூலம் நெல் விற்பனைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மதுரை மாவட்ட விவசாயிகள் மக்காச்சோளம் பருத்தி உள்ளிட்ட பயிர்களுக்கு காப்பீடு செய்ய விண்ணப்பிக்குமாறு வேளாண் இணை இயக்குனர் பொறுப்பு ராணி தெரிவித்துள்ளார்.

பயிர் காப்பீட்டு கட்டணத்தை பொது சேவை மையங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் செலுத்தி பதிவு செய்துகொள்ளுமாறு கூறியுள்ளார்.

************

ஜெய்சங்கர்

இந்தியா - லக்ஸம்பர் நாடுகள் இடையே நம்பிக்கையான நட்புறவு நிலவுவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் லக்ஸம்பர் நாட்டு துணை பிரதமர் திரு.ஷேவியர் பெட்டலை இன்று சந்தித்து பேசிய அமைச்சர், வர்த்தகம், முதலீடுகள், நிதி ஒத்துழைப்பு, பிரிவுகளில் இரு நாடுகளுக்கிடையே சிறந்த ஒத்துழைப்பு திகழ்வதாகவும், விண்வெளி, மின்னணு, பசுமை தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்படுவதாகவும் கூறினார்.

தடையற்ற வர்த்தக ஒத்துழைப்பிற்கு லக்ஸம்பர் அளித்த ஆதரவிற்கு டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

லக்ஸம்பர் வெளியுறவு அமைச்சர் தமது பதிலுரையில் பலவேறு நாடுகளுக்கு இடையே நிலவும் குழப்பங்களின்போது அமைதி தூதுவராக இந்தியா திகழ்வதாக பாராட்டியுள்ளார்.

************

ஊட்டசத்து இயக்கம்

நாட்டின் 9ஆவது ஊட்டசத்து இயக்கம் நாளை மறுநாள் வாரநாசியில் தொடங்குகிறது.

மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி இதனை தொடங்கிவைக்கிறார்.

ஒருங்கிணைந்த அங்கன்வாடி, ஊட்டசத்து மேம்பாட்டின் கீழ், அங்கன்வாடி மேலாண்மை குழுக்களை ஏற்படுத்துவதற்கான நடைமுறைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட உள்ளது.

ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் ஊட்டசத்து மாதமாக கடைபிடிக்கப்படும் நிலையில்,

உணவு பரவல் மற்றும் புரத சத்து

அங்கன்வாடி மையங்களில் சமைத்த உணவுகள்,

சமூக பொறுப்புணர்வு ஊட்டசத்து

குழந்தை மேம்பாட்டிற்கான உத்வேகம் மற்றும் கல்விமுறை என்ற 5 அம்சங்களின் அடிப்படையில் இந்த ஆண்டு ஊட்டசத்து மாதம் கடைபிடிக்கப்படுகிறது.

************

காற்று தினம்

ஆரோக்கியமான வாழ்விற்கு தூய்மையான காற்று மிகவும் அவசியம் என்று தேசிய பசுமை தீர்வாயத்தின் தலைவர் நீதிபதி பிரகாஷ் ஸ்ரீவத்சவா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச தூய்மை காற்று தினத்தை ஒட்டி இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தூய்மையான காற்று, மாசை நீக்கி அனைவரும் தடையின்றி நடமாட வழிகோலுவதாக கூறினார்.

காற்று மாசுவை தடுக்க அனைத்து தரப்பினரின் ஒருங்கிணைந்த பங்களிப்பை அவர் வலியுறுத்தினார்.

தேசிய தூய்மை காற்று திட்டத்தின் கீழ், சிறந்த மாநிலங்கள், நகரங்கள், வார்டுகளுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது